Book 24

# புதிய நினைவூட்டல்

மாத இதழ்

அவர்கள் கடவுளின் ஒளியை தங்கள் வாய்களால்

ஊதி அணைத்து விட விரும்புகிறார்கள்.

ஆயினும், நம்பிக்கையற்றவர்கள்

வெறுத்தபோதிலும் கடவுள் தன் ஒளியை

பூரணமாக்கியே தீருவார்.

குர்ஆன்(61:8)

ஆகஸ்ட்
2001
August

PUTHIYA NINAIVOOTAL
TAMIL MONTHLY

மிக்க அருளும் மிக்க அன்பும் உடைய இறைவனின் பெயரால்.

இந்த மக்கள் பேசும் பேச்சுக்களை நாம் நன்கறிகின்றோம்.இவர்களை நிர்பந்தப்படுத்தி ஏற்கச் செய்வது உமது பணியல்ல என் எச்சரிக்கைக்கு அஞ்சுகின்ற ஒவ்வொருவருக்கும் நீர் இந்த குர்ஆனைக் கொண்டு அறிவுரை கூறுவீராக! (50:45)

# புதிய நினைவூட்டல்

## ஓர் உலகம், ஓர் இறை, ஒரே செய்தி


செய்தி 2

ஆகஸ்ட் 2001
நினைவு 7


குறிப்பு:- உண்மையான இறையச்ச முடையவர்களே மேம்போக்காக எதையும் படிக்காமல் வசன எண்களை உங்களிடமுள்ள குர்ஆனை ஒப்பிட்டு பார்த்து சிந்தித்து விளங்கிக் கொள்ளுங்கள்.


ஆசிரியர் :
C.S. ரஃபியுத்தீன்

துணை ஆசிரியர் :
N.A. அஹமது ஹுஸைன்



தனிச்சுற்று இதழ்

சந்தா விபரம்

உள் நாடு ஓராண்டு ரூ. 60.00

தனி பிரதி ரூ. 5.00

புதிய நினைவூட்டல் மாத இதழ்

அலுவலகம்


## இதழின் உள்ளே


★ ஒட்டகம்

★ பிரார்த்தனை


★ நயவஞ்சகர்களை வெளிப்படுத்தும்

★ நேர்வழி காட்டுகிறவர்...

★ இஸ்லாம் என்றால்.....

★ முஸ்லிம் என்பவர்.......

★ கீதையின் பார்வையில்......



# ஒட்டகம் ஒரு வியக்கத்தக்க விலங்கு

ஆங்கில ஆக்கம் : லிடியா கெல்லி

ஒட்டகங்களையும் அவை எவ்வாறு படைக்கப்பட்டுள்ளன என்பதையும் இவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? குர்ஆன் 88:17

வேதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள எத்தனையோ மிருகங்களில் - உதாரணமாக நாய்கள், குதிரைகள், பறவைகள் போன்றவை ஏன் ஒட்டகத்தைப் பற்றி மட்டும் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? என்று கடவுள் நம்மைத் தூண்டுகிறார். ஏனெனில் அதன் படைப்பே ஒரு தனியான அற்புதம் ஆகும். ஒரு மேலை நாட்டானுடைய கண்ணுக்கு ஒட்டகம் அழகானதல்ல, ஆயினும் அது செய்ய வேண்டிய பணிகளுக்கும், வாழ வேண்டிய இடத்திற்கும் மிகவும் பொருத்தமாகவே அதன் அமைப்பும் தோற்றமும் இறைவனால் வழங்கப்பட்டுள்ளது. அது கடவுளின் ஓர் அருட்கொடையாகும். ஒட்டகங்கள் இல்லாவிட்டால் உலகின் பெரும்பகுதியைச் சேர்ந்த மக்களின் வாழ்வு மிகவும் சிரமமானதாக இருந்திருக்கும்.

ஒட்டகத்தின் அனைத்து விஷயங்களும் அதன் வாழ்வுக்கும், மனித சமூகத்திற்கு அது செய்ய வேண்டிய பணிகளுக்கும் ஏதுவானதாகவே உள்ளன. ஒட்டகத்தின் பாதங்கள் குளம்புகளுடையதாக (Hoof) இருந்தபோதிலும் மிகவும் தட்டையாகவும் மிகச்சிறிய மணற்துகள்களுக்குள் அது புதைந்து போய் விடாத வண்ணம் விரிந்து கொடுக்கக் கூடியதாகவும் அமைந்துள்ளது. அதன் முகம் சூரிய வெப்பத்திலிருந்தும் மணலிலிருந்தும் அதனைப் பாதுகாக்கும்படி அமைக்கப்பட்டுள்ளது. அதன் அடர்த்தியான புருவங்கள். கனமான இமை முடிகள், மற்றும் இமைகள் அனைத்தும் அதன் முகத்தை மண்ணிலிருந்து பாதுகாக்கின்றன. மேலும் கடுமையான மணற்புயலிலிருந்து தற்காத்துக் கொள்ளும்படி மூடிக்கொள்ள மற்றொரு இமையும் உள்ளது. பிளவுகள் கொண்ட அதன் மூக்குத் துளைகள் மணல் வீச்சிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக மூடிக்கொள்ளும் தன்மையைக் கொண்டுள்ளன. அழுக்கு மற்றும் மண் ஆகியவை அதன் காதுக்குள் புகுந்துவிடா வண்ணம் கனமான மூடிகளை காதுகளுக்கு உள்ளும் புறமும் கொண்டுள்ளது.

ஒட்டகத்தின் திமில் ஆனது ஒரு கொழுப்புப் படிவமாகும். உணவுத் தட்டுப்பாட்டின் போது அது கிட்டாத போது அதன் திமில் வற்ற ஆரம்பிக்கின்றது. எனினும் அதனைக் கொண்டே அதனால் பல நாட்கள் காலம் தள்ள முடியும். மீண்டும் உணவு கிடைக்கும்போது அது மிகச் சரியாக தன் பழைய நிலைக்கு மீண்டு விடுகின்றது.

பாலைவனங்களில் உணவுத் தட்டுப்பாடு அடிக்கடி வரக்கூடும் என்பதால் ஒட்டகங்கள் எதனையும், கூடாரங்கள் உட்பட, உண்ணக்கூடியவையாக உள்ளன. அதன் வாய்களின் மேலண்ணங்கள் (மேல்தோல்) அது முள் நிறைந்த கள்ளிகளைக்கூட வாய்க்கு எந்த தீங்கும் ஏற்படாமல் உண்ணும் அளவுக்குத் தடிமனானதாக உள்ளது.

வெப்பம். மற்றும் தண்ணீர்ப் பஞ்சம் ஆகியவற்றை ஒட்டகம் எப்படிச் சமாளிக்கிறது என்பது நம்புதற்கரிய ஓர் அற்புதமாகும். முதன்மையில், ஒட்டகம் மிகக் குறைவான அளவே தனது சக்தியைப் பயன்படுத்துகின்றது. அதன் உடல் வெப்பம் சாதாரணமாகவே கூடிக் குறையக் கூடியதாக உள்ளது. அதன் உடல் வெப்பம் காலையில் 94° துவங்கி உச்சிப்பொழுதில் 105° வரை தொடக்கூடும். (நம்முடைய சாதாரண உடல் வெப்பம் 98' ஆகும். 1 0 1 °, என்றால் நாம் நோயாளியாகி விடுகிறோம்) வியர்வையை வெளிப்படுத்தக் கூடிய மிகச் சில மிருகங்களில் ஒட்டகம் ஒன்றாகும். கடும் சூரிய வெப்பத்திலிருந்து அதனைப் பாதுகாக்கும் அடர்த்தியான அதன் உடலில் உள்ள மயிர்க்கால்கள் அதன் வியர்வைக்கு வழிவிடுவதாக அமைக்கப்பட்டுள்ளது. சில மிருகங்களைப் போல் நாக்கைத் தொங்க விட்டு உடல் வெப்பத்தை தணித்துக் கொள்ளும் முறையை விட இது சிறப்பான வழிமுறையாகும். ஏனெனில் இவ்வழிமூலம் அதன் உடலில் உள்ள அரிய திரவங்கள் வீணாவதில்லை. நம்ப முடியாத அளவுக்கு மிகத் திறனுடன் ஒட்டகம், அதன் சக்திக்கேற்ற உடல் வெப்பம் மிகவும் உச்சத்தைத் தொட்டாலன்றி வியர்வையை வெளிப்படுத்துவதில்லை.

இந்த முறையில் நீரைப் பயன்படுத்தும் மிருகம் எதுவுமில்லை. மேலும் அது தன் இரத்தத்திலிருந்து நீரை இழக்காமல் திசுக்கள் மூலமே இழக்கிறது. இவ்விதம் அதன் இரத்தம் உடல் முழுவதும் சுற்றி அதன் உடல் வெப்பத்தைத் தணிக்கும் அளவுக்குத் தொடர்ந்து நீர்த்திருக்கின்றது.

ஓர் ஒட்டகம் அதற்குத் தேவையான போது மட்டுமே நீரை உட்கொள்ளும். மேலும் அவசியமாகும் போது மட்டுமே நீரை வெளிப்படுத்தும். அது இரு நாட்களில் 5 காலன் நீரை இழந்தது என்றால் 5 காலன் நீரை

உட்கொண்டுவிட்டு நடையைக் கட்டிவிடும். குளிர் காலம் முழுவதும் கூட நீரருந்தாமல் அதனால் இருந்துவிட முடியும். மேலும் அது மிகவும் விரைவாக நீரை அருந்தக் கூடியதாக - மிகக் குறைவான நேரத்தில் 25 காலன் நீர் - உள்ளது. இவ்வளவு வேகமாக நீரருந்தினால் வேறெந்த மிருகமும் மூச்சுத்திணறி இறந்து விடக் கூடும்.

எனவே ஒட்டகம் மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு விலங்காகவே உள்ளது. அதன் படைப்பைக் குறித்து நாம் சிந்திக்கும் போது அதன் சூழ்நிலைக்கு ஏற்றவாறு அதனை மிகச் சரியாக வடிவமைத்த கடவுளின் வழிகளை எண்ணி வியக்காமல் இருக்க முடியாது. கடவுள் நம்மையும் நம்முடைய அனைத்துச் சூழ்நிலைகளிலும் அவரைச் சரணடைந்தவர்களாகவே ஆக்கி வைப்பாராக!

# பிரார்த்தனை செய்வதின் முக்கியத்துவம்

மொழியாக்கம்:- அபுபக்கர் சித்திக்

நாம் கண்டிப்பாக கடவுளிடம் மட்டுமே பிரார்த்தனை செய்ய வேண்டும் (25:68, 7:37) என்பதை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்பது இறைவன் நாட்டமாகும் மேலும் மக்கள் பிரார்த்திக்க வேண்டும் என்பதற்காக இன்னல்களையும் நோயையும் கொண்டு கடவுள் சோதிப்பார் (6:42, 7:94) எனவும் குர்ஆன் நமக்கு போதிக்கிறது. சோதனைகள் ஏற்படும் போது கடவுளிடம் பிரார்த்தனை செய்ய வேண்டும் (6:43) என்பதையும் குர்ஆன் மேலும் சுட்டிக்காட்டுகிறது.

தொடர்ந்து குர்ஆன் முழுவதும் பிரார்த்தனை சம்பந்தமான பல உதாரணங்களை நாம் காண முடிகிறது. நூஹ் நபி கடவுளை அழைத்த போது, அவரையும் அவரது குடும்பத்தையும் மிகப் பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றி அவருடைய பிரார்த்த னைக்கு கடவுள் பதிலளித்தார் (21:76, 26:117.118) அய்யூப் நபிக்கு ஷைத்தான் துன்பத்தையும் வேதனையையும் தொடர்ந்து கொடுத்து வந்தபோது அவர் கடவுளை அழைத்தார் அவருக்கு கடவுள் பதிலளித்தார் (38:41, 21:84) குகையில் தஞ்சம் புகுந்த இளைஞர்கள் கடவுளிடம் பிரார்த்தனை செய்தார்கள் கடவுள் தன் நேர்வழி கொண்டு அவர்களுக்கு அருள் செய்தார் (18:10) பிர் அவ்னின் மனைவி தனக்கு சுவர்க்கத்தில் ஒரு வீட்டை கட்டுமாறு பிரார்த்தனை செய்தார் (66:11)

யூனுஸ் நபி கடவுளிடம் பிரார்த்தனை செய்தார், துக்கத்திலிருந்து அவரை கடவுள் காப்பாற்றினார் (21 :87, 88) ஜக்கரியா நபி கடவுளிடம் பிரார்த்தித்தார்.

அவருக்கு யஹ்யாவை. மூஸா நபியும். ஹாரூண் நபியும் பிர் அவ்ன் மற்றும் அவன் பிரமுகர்களை விட்டும் செல்வத்தை நீக்கும்படியாக பிரார்த்தித்தனர் அவர்கள் பிரார்த்தனைக்கும் பதில் அளிக்கப்பட்டனர். யூசுப் நபியை பெண்களின் தீய திட்டங்களிலிருந்து காப்பாற்றி அவருடைய பிரார்த்தனைகளுக்கு கடவுள் பதிலளித்தார் (12:34) லூத் நபி வெற்றியை வேண்டி கடவுளிடம் பிரார்த்தித்தார் (29:30) அவ்வாறே சாலிஹ். ஹீத் இப்ராகிம் மேலும் மற்றவர்களும பிராத்தித்தார்கள்.

சுலைமான் நபி செய்ததுபோல் (38:35) நீங்கள் பொருள்கள் வேண்டியும் பிரார்த்தனை செய்யலாம். அதே நேரத்தில் மறுமையில் உங்கள் பங்கை புறக்கணிக்காத வகையில் அந்த பிரார்த்தனை இருக்க வேண்டும் ஆனால் வரம்பு மீறிய அக்கிரமக்காரர்களுக்காக ஒரு போதும் பிரார்த்தனை செய்யக் கூடாது (11:37. 60:4) மேலும் நினைவில் கொள்ளுங்கள் மக்கள் என்ன கேட்கிறார்களோ அவ்வாறே கடவுள் அவர்களுக்கு வெகுமதிகள் வழங்குகிறார் (5:84. 85) உயிர்த்து எழுப்பப்படும் நாளில் (மறுமையில்) தன் அடியார்களில் தன்னிடம் பிரார்த்தனை செய்த பிரிவினரை கடவுள் சுட்டிக்காட்டுவார் (52:28) அவர்கள் இறைவா நாங்கள் நம்பிக்கை கொண்டோம் எனவே எங்களை மன்னித்து எங்கள் மீது அருளைப் பொழிவீராக என்பார்கள் (28:109./18) மேலும் அவர்கள் பாவ மன்னிப்பு வேண்டி அதிகாலை நேரத்தில் பிரார்த்தித்தார்கள்,

சில பிரார்த்தனைகளுக்கு ஏன் பதில் கிடைப்பதில்லை

குர்ஆன் அறிவிக்கிறது. மனிதன் சிலவற்றிற்காக தொடர்ந்து பிரார்த்தனை செய்வான். ஆனால் அது அவனுக்கு தீங்கானதாக இருக்கும். ஆனால், தான் நல்லதையே பிரார்த்திப்பதாக எண்ணுகிறான். மனிதன் பொறுமையில்லாதவனாக (அவசரக்கரனாக) இருக்கிறான் (17:11) அவன் சிலவற்றை வெறுக்கிறான். ஆனால் அது அவனுக்கு நல்லதாக இருக்கும். சிலவற்றை விரும்புகிறான் அது அவனுக்கு கெட்டதாக இருக்கும் (2:216, 4:19) மனிதர்கள் அறியாதவற்றை கடவுள் அறிந்தவராக இருக்கிறார்.

கடவுள் தன் அடியார்களின் பிரார்த்தனைகளுக்கு பதிலளிக்கிறார். அதே வேளையில் நம்பிக்கையற்றவர்களின் (நிராகரிப்போரின்) பிரார்த்தனைகள் வீணானது. உபயோகமற்றது (2:186. 13:14. 40:50) எனவும் குர்ஆன் விளக்குகிறது.

## எல்லாபுகழும் கடவுளுக்கே!.

# நயவஞ்சகர்களை வெளிப்படுத்தும் 19

இப்னு தாஜுத்தீன்

நயவஞ்சகர்கள் உம்மிடம் வந்தால் “நிச்சயமாக நீர் கடவுளின் தூதர் என்று நாங்கள் சாட்சியளிக்கிறோம்” என்று கூறுகின்றனர். நீர் அவருடைய தூதர்தான் என்பதைக் கடவுள் அறிவார். மேலும் இந்நயவஞ்சகர்களை பொய்யர்கள் என்று கடவுள் சாட்சியம் கூறுகின்றார். 63:01

ஒரு புதிர் போன்ற இவ்வசனம் ஆழ்ந்து சிந்திக்கும்போது பல உண்மைகளை நமக்கு அறிவிக்கின்றது. குர்ஆன் முழுவதும் பல இடங்களில் நயவஞ்சகர்களின் செயல்கள் விபரமாகக் கூறப்படுகின்றன. அவ்விதம் மேற்கண்ட வசனத்தில் நயவஞ்சகர்களின் செயலாகக் கூறப்படுவது கடவுளின் தூதரை அவர் தூதர்தான் என்று சாட்சியம் கூறுவதையே ஆகும். இங்கே வியப்புக்கும் கவனத்திற்கும் உரிய விஷயம் என்னவென்றால் ஒரு உண்மையான விஷயத்தை அவர்கள் சாட்சியாகக் கூறுகின்றார்கள். ஆயினும் இந்த உண்மையான விஷயத்திற்குச் சாட்சியம் கூறுபவர்களை பொய்யர்கள் என்று கடவுள் கூறுகின்றார். அது எப்படி? ஒரு உண்மையான விஷயத்திற்குச் சாட்சியம் அளித்தவர்கள் ஏன் அல்லது எப்படிப் பொய்யர்கள் ஆனார்கள்! ஏன் இந்த உண்மைக்குச் சாட்சியம் அளிப்பவர்களை பொய்யர்கள் என்று கடவுள் கூறுகிறார்?.

இதனை விளங்கிக் கொள்ள யதார்த்தத்தில் உள்ள இதே போன்ற அவர்களுடைய மற்றொரு சாட்சியத்தை நாம் இதனுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் நமக்கு விஷயங்கள் தெளிவாகும். இங்கே முஹம்மதின் தூதுத்துவத்தை இறைசாட்சிப் பிரமாணத்தில் சேர்த்ததும் அவ்வாறு சேர்த்தே ஆகவேண்டும் என வலியுறுத்துவதும் (ஹதீஸ்களை) பாரம்பர்யங்களைப் பின்பற்றும் முஹம்மதியர்களே என்பதை நினைவில் கொள்வோம்.

மேற்குறிப்பிட்ட விஷயத்தைப் போலவே முஹம்மதியர்கள் சாட்சியம் அளிக்கும் மற்ற சில உண்மையான விஷயங்களையும் அவர்களுடைய சாட்சியத்தில் அவர்கள் எந்த அளவு உண்மையாளர்களாக உள்ளனர் என்பதையும் காண்போம்.

அவர்கள் குர்ஆனை அல்லாஹ்வின் (கடவுளின்) வார்த்தைகள் என்றும் அதிலுள்ள அனைத்து விஷயங்களும் பூரண சத்தியங்களே என்றும் கூறுகின்றனர். ஆயினும் கடவுளுடைய வார்த்தைகளை எந்த அளவு அவர்கள் வாழ்வின் நடைமுறைகளில் பின்பற்றுகின்றனர் என்பதை அவர்களுடைய நடவடிக்கைகளையும் குர்ஆனின் வசனங்களையும் ஒப்பிட்டுச் சிந்தித்தால், அவர்களுடைய மேற்கண்ட சாட்சியத்தில் அவர்கள் எந்த அளவு உண்மையாளர்களாக உள்ளனர் என்பதை நாம் விளங்கிக் கொள்ள முடியும்.

அதே போல் குர் ஆனைக் கடவுள் விவரிக்கப்பட்டது. தெளிவானது. பூரணமானது. முற்றிலும் நேரான வழியைக் காட்டுவது என்று கூறுகின்றார். குர் ஆனை உண்மை என்று ஏற்றுக் கொள்வதாகக் கூறும் இவர்கள் குர்ஆனில் இன்னின்ன விபரங்கள் கூறப்படவில்லை (உம், தொழுகை, ஹஜ் போன்றவை) இன்னின்ன விஷயங்களில் அது தெளிவாக இல்லை (உ-ம், வட்டி, சொத்துப் பிரிவினை போன்றவை) இன்னின்ன விஷயங்களில் அது பூரணமானதாக இல்லை (3-ம், வாழ்க்கை நடைமுறைகளான குளிப்பது, தூய்மை அடைவது. நகம் மற்றும் முடிவெட்டுவது போன்றவை) ஹதீஸ்களையும் குர் ஆனுடன் இணைத்தால் மட்டுமே அது பூரணமானதாகும் என்றும் கூறுகின்றனர். மேலும் குர் ஆனை மட்டும் பின்பற்றினால் அது நம்மை வழிகேட்டில் விட்டு விடும் என்றும் பிரசாரம் செய்கின்றனர். இவை குர் ஆனைக் கடவுளின் வார்த்தைகள் என்று நம்புவதாகவும் சாட்சி கூறுவதாகவும் கூறும் அவர்களுடைய கூற்றில் அவர்கள் எந்த அளவு உண்மையாளர்களாக உள்ளனர் என்பதை எடுத்துக்காட்டும்.

அவ்வாறே. இறுதி வேதமான அல்குர் ஆனைத் தானே இறக்கியருளியதாகவும் தானே பாதுகாத்துக் கொள்வதாகவும் கடவுள் குர் ஆனில் உறுதியளிக்கின்றார். இவ்வசனத்தின் அடிப்படையில் அல்குர்ஆன் அன்று முஹம்மத் நபிக்கு எவ்வாறு அருளப்பட்டதோ அவ்வாறு ஒரு எழுத்துக் கூட மாற்றப்படாமல் அதே விதமாகப் பாதுகாக்கப்பட்டுள்ளதாகவும், ஒரு சிறிய சிதைவுகூட ஏற்படவில்லை என்றும் அவர்கள் கூறி வருகின்றனர். ஆயினும் சத்தியம் தான் கடவுள் (24:25) என்ற குர்ஆன் வசனத்தின்படி அவர்கள் கூற்று உண்மையானதுதானா சத்தியமானதுதானா என்பதை நாம் இங்கே காண்போம்.

அல்குர்ஆன் அன்று இறக்கப்பட்ட அதே விதமாகப் பாதுகாக்கப்பட்டுள்ளது என்று கூறும் இவர்கள் அதே சமயம் குர்ஆன் இருவிதமாக எழுதப்படுவதாக

ஒப்புதல் வாக்குமூலமும் தருகிறார்கள். (ஹஃப்ஸ் மற்றும் வர்ஷ் பிரதிகள்) இவ்விரு பிரதிகளுக்கிடையிலும் ஏராளமான எழுத்து வித்தியாசங்களை சற்று உற்றுக் கவனித்தால் நாம் காண முடியும். உதாரணமாக முதன் முதலில் வெளிப்படுத்தப்பட்ட அத்தியாயமான அலக் என்ற 96வது அத்தியாயத்தில் இடம்பெறும் எழுத்துக்களை நாம் காண்போம். இந்தியா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளில் வெளியிடப்படும் குர்ஆனையும் சவூதி அரசின் அங்கீகாரம் பெற்ற அங்கே அச்சிடப்படும் குர்ஆனையும் நாம் எடுத்துக் காண்போம். முதன் முதலில் வெளிப்படுத்தப்பட்ட 96ம் அத்தியாத்தின் முதல் ஐந்து வசனங்களில் இன்ஸான் (மனிதன்) என்ற அரபி வார்த்தை இருமுறை இடம் பெறுகிறது. இரு பிரதிகளிலும் மேற்கண்ட வார்த்தை எழுதப்பட்டிருக்கும் விதத்தை நாம் நோக்கினால் அவற்றில் ஒன்றில் (சவூதியின் அங்கீகாரம் பெற்ற பிரதியில்) இன்ஸான் என்ற மேற்கண்ட வார்த்தை அலீஃப், நூன். ஸீன். நூன் என்ற நான்கு எழுத்துக்களைக் கொண்டும், மற்றொன்றில் (இந்தியாவில் அச்சிடப்படும் பிரதியில்) மேற்கண்ட அந்த வார்த்தை அலிஃப். நூன், ஸீன், அலிஃப், நூன் ஆகிய ஐந்து எழுத்துக்களால் எழுதப்பட்டிருப்பதையும் நாம் காணலாம் (ஜேர். ஜபர், போன்ற அகர இகரக் குறிகள் அக்காலத்தில் இருந்ததில்லை என்பதை இங்கே நினைவூட்ட விரும்புகிறோம்.)

இங்கே மாற்றப்பட்டிருப்பது ஒரு எழுத்து மட்டும் அல்ல. ஏனெனில் குர்ஆன் முழுதும் இன்ஸான் என்ற வார்த்தை 95 முறை இடம் பெறுகின்றது. (95 = 19 x 5 ) எனவே 95 எழுத்துக்கள் இரு குர்ஆன் பிரதிகளிலும் வித்தியாசமாக உள்ளது.

அதுபோல் ஆயத் என்ற வார்த்தை இந்தியாவில் அச்சிடப்படும் பிரதிகளில் அலிஃப். யே, ஹே என்ற மூன்று எழுத்துக்களைக் கொண்டு எழுதப்படுகின்றது. அதே சமயம் சவூதியில் அச்சிடப்படும் குர்ஆனில் ஹம்ஸா அலிஃப், யே. ஹே. ஆகிய நான்கு எழுத்துக்கள் கொண்டு எழுதப்படுகின்றது. ஆயத் என்ற இவ்வார்த்தையின் வெவ்வேறு வடிவங்கள் குர்ஆன் முழுதும் ஏராளமான முறைகள் இடம் பெறுகின்றன. அத்தனை இடங்களிலும் ஹம்ஸா என்ற எழுத்து இந்தியப் பிரதிகளில் இடம் பெறுவதில்லை . சவூதிப் பிரதிகளில் மட்டும் அவ்வெழுத்து இடம் பெறுவதை நாம் காண்கிறோம்.

இன்று பழக்கத்தில் உள்ள இவ்விரு வகைப் பிரதிகளில் மட்டுமல்ல. இத்தகைய எழுத்து வித்தியாசம் தாஷ்கெண்டில் உள்ள பிரதிக்கும் இன்று புழக்கத்தில் உள்ள இவ்விருவகைப் பிரதிகளுக்கும் இடையிலும் உள்ளது.

7வது அத்தியாயத்தின் 69வது வசனத்தில் இடம் பெறும் பஸ்தத்தன் என்ற வார்த்தை தாஷ்கெண்டில் உள்ள பிரதியில் பே. ஸீன், தோய். ஹே ஆகிய நான்கு எழுத்துக்கள் கொண்டு எழுதப்பட்டுள்ளது. அதே சமயம் இன்று புழக்கத்தில் உள்ள ஹஃப்ஸ் மற்றும் வர்ஷ் ஆகிய இரு பிரதிகளிலும் பே, ஸாத் தோய். ஹே ஆகிய எழுத்துக்கள் கொண்டு எழுதப்பட்டுள்ளது அதன் கீழே சிறிய எழுத்தில் ஸீன் என்ற எழுத்து எழுதப்பட்டிருக்கும் ஏன் இரு எழுத்துக்கள்? ஸாத்-ஆ? ஸீன்-ஆ? ஒரு வார்த்தைக்கு இரண்டு எழுத்துக்கள் ஏன்? இரண்டும் சரிதான் என்றால் கடவுள் தந்தது எது? (குர்ஆன் முழுவதும் ஆங்காங்கே ஒரு எழுத்துக்கு மேல் மற்றொரு எழுத்து குறிப்பிட்டிருப்பார்கள். உதாரணமாக மின்பஃதிஹி என்ற வார்த்தையில் நூன் என்ற எழுத்துக்கும். பே என்ற எழுத்துக்கும் இடையில் "மீம்" என எழுதியிருப்பார்கள். இது "மின்+பஃதிஹி" சேரும்போது "மிம்பஃதிஹி" என்று உச்சரிப்பதற்கு உதவியாக இவர்கள் ஏற்படுத்திய குறிகள். இது அத்தகைய உச்சரிப்பு குறியீடு அல்ல! சிலர் இலக்கண காரணங்கள் கூறுவார்கள். அதாவது "ஸீன்" என்ற எழுத்து பக்கத்தில் "(தோய்)" வந்தால் "ஸன்" என்பது "ஸாத் ஆக" மாறும் என்பது இலக்கணம் என்பர். "உம்மத்தவ் வஸத்தா"வில் "ஸீன்" பக்கத்தில் "தோய்" வருகிறதே ஏன் அதை மாற்றவில்லை என்றால் சற்று அதி புத்திசாலிகள் புள்ளி வைத்த (ஸுக்குன்) "ஸீன்" பக்கத்தில் "தோய்" " " வந்தால் தான் அப்படி மாறும் எனச் சொல்வார்கள். 2:238ல் *சலாத்துல் உஸ்தா" மாற்றப்படவில்லையே, ஏன்? என்று கேட்டால் வேறுபுதுப்பொய்களைத் தேடி ஓடுவார்கள். இவர்களின் உச்சரிப்பு குறிகளையும், இலக்கண விதிகளையும், ஒதுக்கி வைத்து விட்டு இருக்கிற பிரதிகளில் பழமையான பிரதியான தாஷ்கண்டில் இருக்கும் மூலப்பிரதியில் பாரத்தால் "ஸீன்" தான் இருக்கிறது. மூலப்பிரதியில் "ஸீன்" இருக்க இவர்கள் ஏன் "ஸாத்" ஆக மாற்றினார்கள்?

இலக்கண விதிகள் அறியாதவரா கடவுள்? "ஸாத்"-ஆக மாற்றியவர்கள் "ஸீன்" - ஐயும் ஏன் சேர்த்து எழுத வேண்டும். ஓர் எழுத்துக் கூட மாற்றப்படாமல் பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்றல்லவா நாம் (தாஷ்கன்ட் பிரதியின் போட்டோகாப்பி பக்கம் 27ல் இணைக்கப்பட்டுள்ளது) நம்பிக்கொண்டிருக்கிறோம். அப்படி இல்லை என்பது தெளிவாகிவிட்டது அல்லவா? எப்படி வந்தது இந்த மாற்றம்? இவர்களால் ஏகோபித்து அங்கீகரிக்கப்படும் மூலப்பிரதிக்கே இவர்கள் மாற்றம் செய்திருக்கிறார்கள். இவர்கள் முன்னோர்கள் குர்ஆனைப் பிரதியெடுக்கையில் மூலப்பிரதியில் ஸீன் இருந்தாலும் அவர்கள் அரபி

இலக்கண அறிவு இவ்வாறு செய்யுமாறு இவர்களைத் தூண்டியிருக்கிறது. ஸீன்ஐ ஸாத் ஆக மாற்றி விட்டார்கள். ஆயினும் மூலப்பிரதியில் உள்ள எழுத்தை மேலே எழுதி வைத்து விட்டார்கள். சரி, இவர்கள் குர்ஆனைச் சிதைக்க முயற்சி செய்து இருப்பது நமக்கு எப்படித் தெரிந்தது? யாரும் இதைப் பற்றி ஏன் பேசவில்லை? இவர்கள் கை வைத்தது இதில் மட்டும்தானா. இல்லை இன்னும் ஏதேனும் உள்ளதா? எது சரி என்று எப்படி, யார் வழிகாட்டுவது? பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்கிறார் கடவுள். பின் எப்படி இப்படி நடந்தது? ஏன் நடந்தது? இப்படியெல்லாம் சிந்திக்கலாமா? பாபம் இல்லையா? நம்பிக்கைதானே வேண்டும்? நம்புகிறோம் என்று கூறிவிட்டு அதற்கு மாற்றமாகச் சிந்திப்பதா? என்று சிலர் எண்ணக் கூடும். அவ்வாறான குருட்டு நம்பிக்கை கொள்ளுமாறு கடவுள் நம்மை ஏவவில்லை. நம்பிக்கை கொண்டவர்களுக்கு இது கடவுளிடம் இருந்து வந்த உண்மை, சத்தியம் என்பது தெரியும் (2:26) என்கிறார். எப்படி தெரியும்? கடவுள் குர்ஆனை ஆராயவும். அதை நன்கு சிந்திக்குமாறும் ஏவுகிறார். (4:82) அவர்கள் தங்கள் இரட்சகரின் வசனங்கள் என்றாலும், குருடர்கள் போல் பார்க்காமலும், செவிடர்கள் போல் சரியாகக் கேட்காமலும் அதன் மேல் விழமாட்டார்கள் என்கிறார். (25:73) ஆகவே கடவுள் கூறியபடி சிந்தித்து, ஆராய்ந்து மேற்கண்ட நம் கேள்விகளுக்கு பதில்களைக் காண்போம்.

இப்பொழுது நாம் குர் ஆன் முழுமையும் மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஓர் கணிதக்கட்டமைப்பில் அமைக்கப்பட்டிருப்பதை நமது இதழில் கண்டு வருகிறோம்.

ஒரு எழுத்தை இவர்கள் மாற்றியதைப் பார்த்தோம் அல்லவா? அது எப்படி உலகுக்குத் தெரிந்தது தெரியுமா?

இந்த அலிஃப்லாம் மீம்ஸாத் ஸீராவில் உள்ள அலிப் லாம் மீம், ஸாத் அனைத்தையும் கூட்டிப்பார்த்தால் 5321 வந்தது. இது 19 ஆல் வகுபடக்கூடிய எண் அல்ல. அதிகமாக உள்ளது. (5320 = 19 X 280) எப்படி ஒன்று கூடுகிறது? எது கூடுகிறது? அலிஃபா. லாமா. மீமா, அல்லது ஸாத்ஆ? தேடிப்பார்த்தால் நம் ஆலிம்கள் கை வைத்த ஸாத் ஒன்றுதான் கூடுகிறது? இப்பொழுது தெரிகிறதா 19ன் வேலை என்னவென்று? ஹதீஸ்கள் இல்லை என்றால் குர்ஆன் அல்லாஹ்விடம் இருந்துதான் வந்தது என்பதற்கு என்ன ஆதாரம் என்று கேட்கும் அறிவாளிகளே! கிடைத்ததா உங்கள் கேள்விக்கு பதில்! ஆக சூரா 7ல் இவர்கள் கைவைக்க முயற்சி செய்து இருப்பதையும். எது சரி என்றும் எப்படி என்றும் நாம் நிரூபித்திருக்கிறோம்.

7வது சூராவில், அலிஃப் - 2529, லாம் - 1530, மீம் - 1164. ஸாத் - 97 முறைகள்.

2529+1530+1/64+97 = 5320 - 280 x 19

இவர்கள் கை வைத்த இடத்தில் ஸாத் இருப்பதால் ஒரு ஸாத் கூடி தெளிவாக அது தனித்து நிற்கிறது. கடவுள் எப்படி அற்புதமாக இந்த வேதம் தன்னிடமிருந்தே வந்தது என்பதற்கான ஆதாரங்களையும். அது பாதுகாக்கப்பட்டிருப் பதையும் வெளிப்படுத்துகிறார் கவனித்தீர்களா?

இப்போது நாம் இங்கே குர் ஆனில் இவர்கள் செய்து வைத்திருக்கும் சிதைவுகளையும் அவற்றை 19ன் அற்புதக் குறியீடு வெளிப்படுத்தியதோடு மட்டுமல்லாமல் சரி செய்வதையும் உதாரணங்களுடன் கண்டோம்.

மேற்கண்ட சிதைவுகள் மட்டுமல்லாமல் குர்ஆனின் வசன எண்களிலும் ஏராளமான குளறுபடிகள் செய்து வைத்துள்ளனர். மேலும் அவற்றின் அத்தியாயங்களின் பெயர்களிலும் சிதைவுகளைச் செய்ய முயற்சித்துள்ளனர் (உதாரணமாக 9வது அத்தியாயத்தின் பெயர் அல் பராஅத் என்பதாகும் ஆயினும் அதற்கு அத்தவ்பா என்னும் ஒரு பெயரைத் தந்துள்ளனர். பனீ இஸ்ராயீல் என்ற 17வது அத்-தின் பெயரை அரசியல் காரணங்களுக்காக அல்இஸ்ரா என்று மாற்றியுள்ளனர் இன்னும் இது போல இரு பெயர்கள் கொண்ட சூராக்கள் அதிகம் உண்டு இத்தகைய சிதைவுகளையும் குர்ஆனின் அற்புதக் குறியீடு வெளிப்படுத்திக் காட்டி அவற்றில் எது சரியானது என்பதையும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. (பார்க்க : பு.நி. டிசம்பர் 99)

இவ்விதமாக, குர்ஆனில் இவர்கள் செய்து வைத்திருக்ககும் அத்தனை சிதைவுகளையும் உலகுக்கு வெளிப்படுத்தி அவற்றைச் சரி செய்யும் வேலையையும் கடவுளின் அத்தாட்சியான 19 என்னும் அற்புதக்கட்டமைப்பு செய்வதை இன்று உலகம் கண்கூடாகக் கண்டு வருகின்றது.

எனவே, இறைவனின் இறுதி வேதமான அல்குர்ஆன் இறைவனால் இறக்கப்பட்டதே எனவும் அது அவராலேயே பாதுகாக்கப்பட்டுள்ளது எனவும் நாம் அறிந்து கொள்கிறோம் முந்திய வேதங்களைச் செய்தது போலவே நிராகரிப்பாளர்கள் குர்ஆனைச் சிதைக்கும் முயற்சிகளைச் செய்தே இருக்கின்றார்கள். ஆயினும் தான் இறக்கிய வேதத்தைத் தானே பாதுகாப்பதாக வாக்களித்த இறைவன் நிராகரிப்பாளர்கள் செய்த சூழ்ச்சியைத் தன் அற்புதமான 19ன் அற்புதக் கட்டமைப்புக்கொண்டு வெளிப்படுத்த அவர்கள் செய்த முயற்ச்சியையும் முறியடித்திருக்கின்றார்.

(தொடர்ச்சி 28ஆம் பக்கம்......)

# நேர்வழி காட்டுகிறவர் வேதங்களை அருளிய கடவுள் ஒருவரே!

அபு ஆரிஃபா

கடவுள் கூறுகிறார். “நிச்சயமாக நேர்வழிகாட்டுவது எமது பொறுப்பேயாகும்” என்றும் 92:12 மேலும் அவரைத் தவிர தான் படைத்த எந்த மனிதனாலும் நேர்வழியில் செலுத்த முடியாது என்பதை விளக்கி மனிதனின் பிடரி நரம்பைவிட மிக நெருக்கமாக தான் இருப்பதாகவும் (50:16) கடவுள் விவரிக்கிறார்

நபியை நோக்கி கடவுள் கூறுகிறார். (நபியே) "அவர்களை நேர்வழியில் செலுத்தும் பொறுப்பு உம்முடையதல்ல. உம்மால் (முடியாது) தான் நாடுவோர்களை கடவுள் நேர்வழியில் செலுத்துகிறார்” 2:272 என்று வசனத்தின் மூலம் கடவுள் மட்டுமே நேர்வழிகாட்டுகிறவர் என்பதை அறியலாம்

ஆனால் நேர்வழி கட்டி அருள்புரிபவர் கடவுள் மட்டுமே என்று பெயரளவில் ஏற்றுக் கொள்ளும் பெரும்பான்மையினர் நடைமுறை வாழ்க்கையிலோ அதற்கு மாறாக தாங்கள் விரும்புகிறவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களால் தான் தாங்கள் நேர்வழியில் இருக்கிறோம் என்று நம்பி மோசம் போய்க் கொண்டு இருப்பதையும் அல்லது கல்வி அறிவு பெற்ற மக்களைப் பொறுத்தவரையிலோ. அவர்கள் இந்த முல்லா சொல்வது சரியா? அல்லது அந்த மதகுரு சொல்வது சரியா ? அல்லது இந்த மார்க்க அறிஞர் நல்லவரா? அந்த ஆன்மிகவாதி நல்லவரா? என்று ஆராய்வதிலேயே, கடவுள் அருளிய வாழ் நாட்களை வீணடித்துக் கொண்டு இருப்பதையும் நாம் அன்றா நடைமுறை வாழ்க்கையில் காணலாம்? என்று உண்மையில் கடவுள் எப்படி நேர்வழி காட்டுகிறார் என்று சிந்திப்பவர்கள் கடவுள் அருளிய வேதங்களின் துணை கொண்டு சிந்திக்க ஆரம்பித்தால் கடவுளுக்கும் அவர் படைத்த உயிரினங்களுக்கும் உள்ள நெருக்கத்தின் விளக்கத்தை கடவுள் மானுட இனத்துக்கு மட்டும் அருளாமல் ஓரறிவு முதல் ஐந்து அறிவுள்ள ஜீவராசிகளுக்கும் அவர் வழங்கி வருவதை அவர் அருளால் தெளிவாக உணரலாம்

அது மட்டும் அல்லாமல் தான் படைத்த உயிரினங்களால் (தனக்கு கீழ்ப்படிந்து வாழும்) மானுடனுக்கு எந்ததீங்கும் நேராமல் செய்து அவைகளை கடவுள் கட்டுப்படுத்தி இருப்பதையும் சிந்தனையாளர்கள் காணலாம் கடவுளின் சத்திய வார்த்தைகளை நினைவு கூறுவோம் அவர் கூறுகிறார் "வானங்களிலும்

பூமியிலும் உள்ளவையாவும் கடவுளை (இடைவிடாமல்) துதித்து கொண்டு இருக்கின்றன. அவர் யாவற்றையும் மிகைத்தவர் நுண்ணறிவாளர்” (64:1) என்பதை ஆராய்ந்தால் கடவுள் தான் படைத்த உயிரினங்களுக்கு அவர் புரிந்து வருகின்ற அருட் கொடைகளை உணரலாம் எவ்வாறெனில் இயல்பான உருவத்தில் காணமுடியாத கடவுளை தங்களின் இயற்கைத் தன்மைக்கு ஏற்றவாறு இயல்பாகவே நேசித்து கடவுளுடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்தும் தங்களுக்கு அவர் விதித்த கடமைகளை நிறைவேற்றி வாழ்ந்தும் வருகின்றன என்பது தெளிவாக விளங்கும். சிறிய உயிரினங்களுக்கு நுண் உடல்களை தந்த கடவுள் பெரிய உயிரினங்கள் மீது தனது அருளாலும் கருணையாலும் பெண் சேர்க்கை. மகரந்த சேர்க்கை போன்ற வழிமுறைகளால் அந்த உயிரின சேர்க்கையை கருத்தரிக்கச் செய்து அவைகளை பரு உடல்களாக வெளியாக்கி வளரச் செய்து வளர்ச்சிக்கு ஏற்ற தேவையான அறிவையும் வழங்கி கண்காணித்து வருகிறார்.

மானுடர்களுக்கு தன்னிடமிருந்து மட்டும் தான் நேர்வழி என்னும் அருட் கொடை. உண்டு என்று விதித்த கடவுள் தான் படைத்த எண்ணற்ற ஜீவராசிகளுக்கும் வழிகாட்டும் பொறுப்பையும் தன் மீது கடமையாக்கி கொண்டார் உதாரணத்திற்காக

கடவுள் கூறுகிறார் (நபியே) "உமது இரட்ஷகர் தேனீக்களுக்கு வஹீ (உள்ளுனர்வு) அறிவித்தார் 16:68 என்றும்

"எறும்புகளின் உரையாடலை சாலமன் கேட்டு புன்னகை பூத்து சிரிக்கலானார்” 27:18-19 என்றும்

"தாவிதுடன் மலைகளும் பறவைகளும் சேர்ந்து கடவுளை துதிபாடிக் கொண்டு இருந்தன 21:79, 34:10, 38:18 என்றும்

எடுத்துக்காட்டி தான் படைத்த அனைத்து உயிரினங்களின் மீதுள்ள தனது ஞானத்தின் ஆதிக்கத்தை உண்ர்த்துகிறார். இவ்வாறாக தேனீக்கு ஒரு மொழி. எறும்புக்கு ஒரு மொழி. என்று சிறப்பித்து அணிலுக்கு ஒரு மொழி, குயிலுக்கு ஒரு மொழி, மயிலுக்கு ஒரு மொழி. காக்கைக்கு ஒரு மொழி. தவளைக்கும் ஒரு மொழி என்று தான் படைத்த எண்ணற்ற உயிரினங்களுக்கும் அவைகளின் இயற்கைத் தன்மைக்கு ஏற்றவாறு அவைகளுக்கு உரிய மொழியை கடவுள் விதித்து இருப்பதை இறை நம்பிக்கையுள்ளவர்கள் புரிந்து கொள்ளலாம்.

24:41 நீர் கவனிக்கவில்லையா? வானங்களிலும் பூமியிலும் உள்ளவையும், இறக்கைகளை விரித்த நிலையில் பறந்த வண்ணமாக பறக்கின்ற பறவைகளும் நிச்சயமாக கடவுளை துதி செய்கின்றன. வானங்களிலும் பூமியிலும் உள்ள ஒவ்வொன்றும் கடவுள் கற்றுக் கொடுத்தபடி தன் வழிபாட்டு முறைகளையும் துதியையும் திட்டமாக அறிந்துள்ளன. கடவுள் அவைகள் செய்கின்றவற்றை முற்றிலும் அறிந்தவராக இருக்கின்றார்.

மொத்ததில் தான் படைத்த எல்லா படைப்பினங்களும் அதனதன் இயற்கைத் தன்மைக்கு ஏற்றுவாறு கடவுள் கற்றுக் கொடுத்த மொழியை கொண்டு அவரை துதித்தும் பணிந்தும் வாழ்கின்றன என்பதை மட்டும் கடவுள் உணர்த்தாமல், தான் நாடினால் அதே உயிரின்ங்களைக் கொண்டு தனக்கு எதிராக செயல்படும் மானுட சமுதாயத்தை அழிக்கவும் முடியும் என்று மேற்கோள் காட்டி எச்சரிக்கிறார். சிந்தித்து பாருங்கள் கடவுளின் வார்த்தைகளை.

"யானைப் படையினர் மீது பறவைகளை கூட்டம் கூட்டமாக அவர் அனுப்பினார். பறவைகள் அவர்களின் மீது சுடப்பட்ட களிமண் கற்களை ஏறிந்து கொண்டு இருந்தன. பிறகு (கால் நடைகளால்) மென்று தின்னப்பட்ட வைக்கோல் போன்று அவர்களை ஆக்கிவிட்டார்" 105:3-5 என்றும் கூறி. சிந்திக்க வைத்து (பாதுகாப்பு) தன்னிடமிருந்து மட்டும் தான் பெற முடியும் என்று விளக்குகிறார்.

கடவுளின் அருட்கொடைகளை சிந்தித்தால் மேலும் கண்ணுக்கு தெரியாத நுண் உயிரினம் முதல் கண்ணுக்கு தெரியும் பெரிய படைப்பான யானை அல்லது கடல் வாழ் திமிங்கலங்கள் வரை அந்தந்த உயிரினங்கள் வாழ்வதற்கு அவர் விதித்த காலதவணை வரை, தேவையான காற்றையும் நீரையும் சுவையான கனிவர்கங்களையும் தாவர வகைகளையும் நிழல் தரும் மரங்களையும் நறுமணம் கமழும். பலவிதமான மலர்களையும் தான் படைத்த உயிரினங்களின் வசதிக்காகவும் தேவைக்காகவும் தான் உருவாக்கினார் என்பதை புரிந்து கொள்ளலாம் மனிதரைப் பொருத்தவரை மானத்துடன் வாழ ஆடைகளின் மூலப்பொருளை இறக்கி ஆடையை உருவாக்கும் அறிவை மானுடனுக்கு அளித்து மானுடன் மேலான இறைவனின் திருப்தியை மட்டும் பெற முயற்சிக்க வேண்டும் என்பதற்காக மானுடனுக்கு பகலை இறைவனின் அருட்கொடைகளை தேடி இறைவனை நினைவு கூர்வதற்காக நிர்ணயித்தார் படைத்தவனின் திட்டத்தை படைக்கப்பட்டவைகளால் சரியாக புரிந்து செயலாற்றும் ஆற்றல் கொடுக்கப்படாவிட்டாலும் தான் படைத்த உயிர் இனங்கள் மீது அவர் விதித்த காலதவணை வரை வாழ்வதற்கு தேவையான அனைத்தையும் அளிக்கும்

பொறுப்பை கடவுள் தன்மீது ஏற்படுத்திக் கொண்டார் என்பதை யாராலும் மறுக்கமுடியாது.

முக்கியமாக இவ்வுலக வாழ்க்கையில் கடவுள் மானுட இனத்தின் மீது எந்த அளவுக்கு நேசம் வைத்து அவர்களுக்கு நேர்வழி காட்டுகிறார் என்பதை தெளிவாக காண்போம். முதலாவதாக தான் படைத்த அனைத்து படைப்பினங்களிலும் மேலான படைப்பாக மானுடப்படைப்பை சிறப்பிக்க விரும்பிய கடவுள் பகுத்தறிவு என்னும் ஆராய்ந்து அறியும் அறிவை அவர்களுக்கு கூடுதலாக வழங்கியிருப்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். அடுத்தாக மானுட இனத்துக்கு தான் செய்த பேருபகாரத்தை எடுத்துக்காட்டி அவர்களுக்கு கடவுளின் வழிகாட்டுதலை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ செய்யும் சுதந்திரத்தையும் வழங்கியிருப்பதையும் நாம் காணலாம். இறுதியில் மானுடன் கடவுள் புரிந்த அருட்கொடைகளுக்காக நன்றியறிதலை காட்டி கடவுளை நினைவு கூர்ந்து வருகிறானா அல்லது அகங்காரமும் ஆணவமும் கொண்டு கடவுளின் வழிகாட்டுதலை புறக்கணிக்கின்றானா என்பதை பிரித்தறிவதற்காக இவ்வுலகத்தை சோதனைக்காலமாக உருவாக்கினார்

ஏனெனில் ஆரம்பத்தில் மேல் உலகத்தாரிடையே தர்க்கம் நடந்த போது கடவுளின் எல்லையற்ற. அளவற்ற வல்லமை மீது நம்பிக்கை கொள்ளாமல் மிகப் பெரிய தவறை மானுட இனத்தினர் செய்துவிட்டனர்.

இருந்தாலும் அதற்காக அவர்களை தண்டிக்காமல் மன்னிக்க விரும்பிய அருளாளர் அவர்களை மன்னித்தார் கடவுளின் பூரண அதிகாரத்தின் மீது நம்பிக்கை வைத்து அவரை மட்டுமே வழிபட வேண்டும் என்றும் அவரின் வழிகாட்டுதலின்படி மட்டும் செயல்பட்டு அவரின் பொருத்தத்தை பெற்று பரலோக சாம்ராஜ்யத்தில் மீண்டும் இணையவேண்டும் என்பதற்காக மானுட இனத்துக்கு பொன்னான வாய்ப்பை கொடுக்க விரும்பினார்.

இதன் தொடக்கமாக கடவுள். ஆதாம், ஏவாள் என்ற மானுட இனத்தின் முதல் ஆண் பெண் இருவரை ஜோடியாக இவ்வுலகத்திற்கு அனுப்பி அவர்களை மானுட வாழ்க்கையின் துவக்கமாக அறிமுகப்படுத்தினார்.

அவர்கள் இருவரும் இறைவனின் திட்டப்படி ஒன்றிணைந்து இறைவன் அருளால் சந்ததிகளை பெற்றனர். அந்த சந்ததிகள் மூலமாக அவர்களைப் பல்கிப் பெருகச் செய்து கடவுள் அதனை தொடர் நிகழ்ச்சியாக்கி வாழ்வையும் மரணத்தையும் அவர்கள் மீது விதித்து ஒருவரையொருவர் அறிந்து

கொள்வதற்காக காலப் போக்கில் பல்வேறு மொழி பேசக்கூடிய சமுதாய பிரிவுகளாக்கினார்.

நேர்வழிகாட்டுதலுக்கு சொந்தக்காரரான அருளாளர் மானுட சமுதாயங்களின் மீது கொண்டுள்ள எல்லையற்ற கருணையால் மானுட சமுதாயங்களில் தான் நாடியவர்களை தனது நல்லடியார்களாக தேர்ந்தெடுத்து தன்புறத்திலிருந்து அவர்கள் மூலமாக கீதை. குறள். தவ்றாத் (தோரா) ஜபூர் (சங்கிதம்) இன்ஜீல் (பைபிள்) உட்பட பல்வேறு வேதங்களையும் நேர்வழிகாட்டும் வழிகாட்டுதலாக்கி அவற்றினை மனிதர்களின் மொழியிலேயே அருளினார்.

காலப் போக்கில் கடவுள் அருளிய சத்திய வார்த்தைகள். மானுட சமுதாயத்தினரின் வரம்பு மீறுதலால் இறைவசனங்கள் இறக்கப்பட்ட மூல மொழியிலும் அதன் அசல் வடிவத்திலும் முழுவதுமாக அவர்களுக்கு கிடைக்காத நிலை ஏற்பட்டது இதனால் மானுட சமுதாயத்தில் பெரும்பான்மையாக இருக்கும் இணைவைப்பாளர்கள் தங்கள் மீது அருளப்பட்ட வேத வசனங்களுக்கு தங்களது இணைவைப்பு சிந்தனையின் தரங்களுக்கு ஏற்ப அர்த்தம் (அனர்த்தம்) கொண்டனர்.

கடவுளை மட்டும் அதிகமதிகம் நினைவு கூறி கடவுள் வார்த்தைக்கு மட்டும் கட்டுப்பட்டு அவரிடம் மட்டுமே தனது தேவைகளை முறையிடவேண்டும் என்ற சத்தியத்தை ஏற்காத பெரும்பான்மையினரை சாத்தான் (பொன்னாடை போர்த்து) வரவேற்றான்.

இதனால் அவர்கள் தங்களின் மூதாதையர் காட்டிய கற்பனைத் தெய்வங்களுக்கும் கடவுளின் நல்லடியார்களுக்கும் மதகுருமார்களுக்கும் கடவுள் தன்மையையோ அல்லது கடவுளின் புனித தன்மையையோ கொடுத்து அவர்களையே துதித்துக் கொண்டும் பூஜித்துக் கொண்டும் இருப்பதோடு மட்டும் அல்லாமல் தங்களால் இணைவைக்கப்பட்டவர்களிடம் தங்களின் கஷ்டங்களையும் வேதனைகளையும் நீக்குமாறு பிரார்த்திக் கொண்டும் மேலும் தங்களின் தேவைகளை நிறைவேற்றி அருளுமாறு வேண்டிக் கொண்டும் இருக்கலாயினர்.

இணைவைக்கப்பட்டவர்களை ஆராதனை செய்யாவிட்டால் தங்களுக்கு கேடு வந்து விடும் என்று சாத்தான் அவர்களை பயமுறுத்தி பொய்யான வாக்குறுதிகளையும் அளித்து பரம எதிரியான மனித இனத்தை கேவலப்படுத்தி நரகத்தில் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற தன் திட்டத்தை சாத்தான் நிறைவேற்றிக் கொண்டான்.

கடவுளிடமிருந்து பாதுகாப்பும் மன்னிப்பும் கிடைக்காமல் போய் மீளமுடியாத (இணைவைப்பு என்ற) சாத்தான் விரித்த சதிவலையில் வீழ்ந்தார்கள்.

கடவுள் மட்டும் நேர்வழி காட்டுகிறார். அவரை மட்டுமே வணங்க வேண்டும். அவருக்கு மட்டுமே அடிபணிய வேண்டும். அவரிடம் மட்டுமே தனது தேவைகளையும் பிரார்த்தனைகளையும் வெளிப்படுத்த வேண்டும் என்பது தான் மானுட சமுதாயம் முழுமைக்கும் அவர் வகுத்து தந்த மாற்றப்படாத ஒழுங்குமுறை.

"இதுதான் கடவுளின் ஒழுங்கு முறை கடவுளின் ஒழுங்கு முறையை விட சிறந்த ஒழுங்குமுறையை யார் தர இயலும். நாம் அவரை மட்டுமே வணங்குகிறோம்". 2 : 138

கடவுளின் ஒழுங்கு முறைகளும் வாக்குறுதிகளும் எக்காலத்திலும் யாராலும் மாற்ற முடியாது என்பதை இறுதியாக நினைவூட்ட விரும்பிய கடவுள் குர்ஆனை வேதமாக அருளினார்.

தங்கள் மூதாதையர்கள் எச்சரிக்கப்படாது இருந்த அரபு சமூகத்தை எச்சரிப்பதற்காக மட்டும் அரபி மொழியில் குர்ஆனை அருளினாலும் உலக சமுதாயம் முழுமைக்கும் சேர்த்து நேர் வழிகாட்டியாகவும் தன்னிடமிருந்து இறுதி வேதமாகவும் குர்ஆனையே தேர்ந்தெடுத்ததோடு அதன் தூய தன்மையை இறுதி நாள் வரை பாதுகாக்கும் பொறுப்பையும் கடவுள் தானே ஏற்றுக் கொண்டார்.

கடவுள் யாருக்கு நேர்வழி காட்டுகிறார் என்று சிந்தித்தால் சாந்த குணமுள்ள உள்ளச்சமுடையவர்களுக்கும் பரந்த மனப்பான்மையுடன் சிந்தித்து அனைத்து வேதங்களிலும் காணப்படும் சத்தியங்களை ஏற்று செயல்படுபவர்களுக்கும் நேர்வழியும் வெற்றியும் அருள்வதாக கடவுளே கூறுவதை நாம் காணலாம் அவர் கூறுகிறார்.

(முகம்மது நபியின் மீது அருளப்பட்ட இந்த குர்ஆன்) 'வேத வசனங்களாகும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. (சாந்த குணமுள்ள ) பயபக்தி உடையவர்களுக்கு மட்டுமே வேத வசனங்கள்) நேர்வழி காட்டும் மேலும் அவர்கள் எத்தகையவர்கள் என்றால் மறைவானவற்றின் மீது நம்பிக்கை கொள்வார்கள் தொடர்புத் தொழுகையை நிலைநாட்டுவார்கள் அவர்களுக்கு வழங்கியதிலிருந்து செலவழிப்பார்கள் மேலும் அவர்கள் (நபியே) உம்மீது

(தொடர்ச்சி 28ஆம் பக்கம்...)

# இஸ்லாத்தை புரிந்து கொள்ள வேண்டும்

N.A.Sha அநேக மனிதர்கள் தங்களிடம் வந்து சேரும் விஷயங்களை புலன் விசாரனை செய்யாமலேயே ஏற்றுக் கொண்டு விடுகின்றனர் துரதிருஷ்ட வசமாக. தங்களை முஸ்லீம்கள் என அழைத்துக் கொள்வோரில் பெரும்பலானோர் இந்த வகையில் தான் வரும் தகவல்களை ஏற்றுக் கொள்ளகின்றனர். குர்ஆன் அல்லாத மற்றய மூலாதாரங்களிலிருந்தும் அவ்விஷயங்களைப் புலன் விசாரனை செய்யாமலும், கேள்விகளற்றநிலையிலும் அங்கீகரித்துப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் ஆலீம்கள் கூட்டத்தினரிடமிருந்து அவைகளைப் பெற்றுச் சரிகாணுகின்றனர்.

கற்றுக் கொள்வதையும் ஆராய்வதையும் சிந்திப்பதையும் அதிகம் ஊக்குவிக்கும் குர்ஆன் இவர்களிடம் இருக்கும் போதும் இந்த நிலை மிக அவலமானதே.

நீங்களாக அதனைப் பரிசீலிக்காமல் எத்தகவலையும் நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டாம். நான் உங்களுக்கு செவிப்புலனையும், பார்வையையும். மூளையையும் வழங்கியுள்ளேன். இன்னும் அவற்றைப் பிரயோகிப்பது உங்கள் பொறுப்பு 17:36.

## இஸ்லாம் என்றால் என்ன?

இஸ்லாம் என்பது ஒரு மதம் என்பதாக மக்கள் மத்தியில் சித்தரிக்கப் படுகிறது. ஆனால் அது இவ்வார்த்தைக்கு சரியான பொருளைத்தராது ஒரு வார்த்தையின் நேரடிப் பொருள் எனும் ரீதியில் சரி, நடைமுறையிலும் சரி இதன் அர்த்தங்கள் :- சுயமாக தானே முன்வந்து சரணடைதல். அடிபணிதல். ஒற்றையான உண்மைக் கடவுளின் வழிபாடு. அவரின் நாட்டம். அவரின் கட்டளைகள் ஆகியவற்றில் முழுமையாகச் சரண்புகுதல் என்பவையே, தனக்குள் அமைதி உணர்வில், பயங்கள் யாவற்றிலிருந்தும் விடுபட்ட தன்மை. முழுவதுமாக காப்பாற்றப்பட்டு பாதுகாக்கப்பட்டதாக உணருதல் ஆகிய இந்நிலைகளை அடைவதற்கு வழிசெய்யும் வகையான அடிபணிதல். அது எத்தகைய தென்றால், முழு மனத்துடனும், எவ்வித சந்தேகமற்ற நிலையிலும், உண்மையான ஒற்றைக் கடவுளின் கட்டளைகளுக்கு சட்டெனக் கீழ்ப்படிவதற்கு மனம் ஒப்பி சரணடையும் அடிபணிதல் ஆகும். ஆக. இஸ்லாம் என்பது வெறுமனே நம்புவதான, ஏதோ ஒன்றின் மீது கொள்ளும் வெற்று நம்பிக்கை அல்ல. ஆனால் அதுவோ கடவுளுக்கு மாத்திரம் முழுவதுமாக அடிபணிவது ஆகும்.

16:51ல் கடவுளின் பிரகடனமாவது யாதெனின்

இரு கடவுள்களை வழிபடாதீர்கள். இங்கிருப்பது ஒரே ஒரு கடவுள் தான். நீவிர் என்னை மாத்திரமே அஞ்சி மதித்தல் வேண்டும்.

52ல் வானங்கள் மற்றும் பூமியில் இருக்கும் ஒவ்வொன்றும் அவருக்கே சொந்தம். ஆகவே. மார்க்கமானது முழுக்க முழுக்க அவருக்கு மட்டுமே அர்ப்பணிக்கப்படல் வேண்டும். நீவிர் கடவுளை விடுத்து மற்றதை வழிபடுவீரோ?

அடிபணிதல் - "தீன்" எனும் வார்த்தையால் அழைக்கப்படுகிறது. அதாவது 'வாழ்வியல் நெறி' என இவ்வார்த்தை பொதுவாக மதம். கோட்பாடு. நம்பிக்கை எனும் அர்த்தம் தொனிக்கும்படி மொழிபெயர்க்கப்படுகிறது. சீராக கவனித்து ஆராயும்போது, இவ்வாறு வரையறுத்த அர்த்தம் கொள்ளுவது இதன் உண்மைப் பொருளிலிருந்து விலகிச் செல்வதாகும். குர்ஆனின் கோணங்களில் இதனை ஆராய்வோம்.

"தீன்" எனும் வார்த்தை வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் குறிக்கக் கூடியதாய் இருக்கிறது. எனவே அதனை மதம் எனும் ஒரே வார்த்தையைக் கொண்டு மொழிபெயர்த்தல் சரியல்ல. தீன் என்பதன் நேரடிப்பொருள் கடன் என்ற ரீதியில் அல்லது பரிமாற்றம் என்ற ரீதியில் இரண்டு பிரிவினர்க்கு இடையில் ஆன வாழ்க்கையின் கொடுக்கல் வாங்கல் என்பதே. அது இங்கு கடவுளுக்கும் அவரது அடிமைகளுக்கும் இடையிலானது எனப் பொருள்படும்.

இஸ்லாம் 'அல்தீன்" என அழைக்கப்படுகிறது. அதாவது வாழ்வியல் நெறி. ஏனெனில் அது வெற்றுச் சடங்குகளாவன ஒரு மதம் அல்ல. ஆனால் , அதுவோ. ஆன்மீக, சமூக, பொருளாதார மற்றும் அரசியல் அமைப்புகளின் தனி நபர். பொது ஜனம், தேசம் மற்றும் சர்வதேசத்தின் தேவைகளை நிறைவு செய்யும் பூரணமான வாழ்க்கை நெறி.

3:102 ஓ நம்பிக்கை கொண்டோரே. நீவிர் கடவுளை எங்ஙனம் கடைப்பிடித்தொழுக வேண்டுமோ, அங்ஙனம் கடைப்பிடித்தொழுக வேண்டும். இன்னும் அடிபணிந்தோராய் அன்றி மரணமெய்த வேண்டாம்.

உண்மையாக. இவ்வேதத்தை நாம் உமக்கு அனுப்பியுள்ளோம். நீங்கள் கடவுளை, உங்களின் மார்க்கம் அவருக்கு மாத்திரம் எனும் நிலையில் அர்ப்பணித்து வழிபடுதல் வேண்டும். அவரையன்றி இணைகளை ஆக்குபவர்கள்

கூறுகின்றனர். "கடவுளுக்கு நெருக்கமாக எங்களை கொண்டு செல்லவே அவர்களை நாங்கள் இணைக்கிறோம். ஏனெனில் அவர்கள் சிறந்தவர்கள்." "கடவுள் அவர்களின் குழப்ப விவாதங்களுக்கெதிராக அவர்களிடம் தீர்ப்பு செய்வார். கடவுள் இத்தகைய பொய்யான நிராகரிப்பாளர்களுக்கு வழிகாட்ட மாட்டார். (39:2,3)

ஆகையால் கடவுளால் விதிக்கப்பட்ட வாழ்க்கை நெறி எது என்றால் அவரின் நாட்டத்திற்கு அடிபணிவதே. பணிசெய்வதிலும், வழிபடுவதிலும்.

3:19 கடவுளின் அங்கீகாரம் பெற்ற ஒரே மார்க்கம் "சரணடைதல்" மட்டுமே. அவ்வாறு இருந்தும் பொறாமை கொண்டு, தங்களுக்கு ஞானம் வந்து சேர்ந்த போதினும், இவ்வுண்மையைப் பற்றி வேதம் வழங்கப்பட்ட இவர்களே குழப்பவாதம் செய்பவர்களாய் இருக்கின்றனர். கடவுள் கணக்கெடுப்பதில் கண்டிப்பு மிக்கவர்.

## முஸ்லிம் என்பவர் யார்?

முஸ்லீம் எனும் அரபிப்பதம் கடவுளின் நாட்டத்தைச் சரணடையும், அடிபணியும் நபரைக் குறிப்பிடுவதாகும். முஸ்லிம். இஸ்லாம் இவ்விரண்டு வார்த்தைகளும் ஒரே வேர்ச் சொல்லில் இருந்து பெறப்படுவதே (ஸலம்)

முஸ்லிமான ஆணோ, பெண்ணோ பிறப்பால் முஸ்லிம் எனும் தன்மையைப் பெற முடியாது. ஒரு நபரின் பெயர். தாய் தந்தையரின் மதப்பின்னணி. அவரின் கோட்பாடு, அவரின் மொழி போன்றவை ஒருவருக்கு அவர் கடவுளுக்கு அடிபணிந்தவர் என்பதற்கான உத்திரவாதத்தைத் தராது. முஸ்லிமாக இருப்பது என்பது அவருக்கும் - நம்முடைய உள்ளார்ந்த எண்ணங்களையும் உளத்துடிப்புகளையும் தெரிந்திருக்கும் எல்லாம்வல்ல கடவுள் நமக்கும் இடையிலான விஷயமே. மேலும் அது கடவுளுக்கு மாத்திரமே தெய்வாம்சம் உண்டு என்று ஏற்று அவரின் நாட்டத்தை அடிபணிந்து. அதனையொட்டி நல்லொழுக்க வாழ்க்கை வாழ ஒருவர் விரும்புகிறாரா என்பதைப் பொறுத்த விஷயம்.

விஷயம் இவ்வாறிருக்க, குர் ஆனைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக்கொள்பவர்களுக்கே இப்பதம் பிரயோகிக்கப்படுகிறது. குர்ஆனைக் கவனத்துடன் ஆராய்ந்தால், இப்பதம் கொண்டு பழைய ஏற்பாடு மற்றும், புதிய ஏற்பாட்டைப் பின்பற்றுவோரையும் குறிப்பிடலாம் என்பது புலனாகும்.

இறுதி ஏற்பாடான குர்ஆன், கடவுளுக்கு மாத்திரம் அர்ப்பணித்த வண்ணம் சில குறைந்த பட்சம் அளவைகளைப் பூர்த்தி செய்யும் எல்லா மதங்களையும் தனக்குள் அனுமதிக்கிறது.

கடவுளுக்கு மாத்திரம் அர்ப்பணித்துக் கொள்வதுதான் மீட்சிக்கான உத்திரவாதம் தரக் கூடியதாகும். ஒருவர், தான் யூதர் என்றோ , கிருஸ்தவர் என்றோ. முஸ்லிம் என்றோ. ஹிந்து என்றோ. அல்லது வேறெதேனும் பெயர் கொண்டு அழைக்கப்படுபவராகவோ தன்னை இணங்காணும் பொழுதும் எவருக்கும் இணையாக்காமல் கடவுளின் தனித்தன்மையை. கடவுளை அகிலங்களின் இரட்சகராக அடையாளங்காணுபவராக இருத்தல் வேண்டும். அது ஒவ்வொருவரின் இன்றியமையாக் கடமையாகும்.

"நிச்சயமாக நம்பிக்கை கொண்டவர்களாக இருப்பவர்களும், யூதர்களாக இருப்பவர்களும், கிருஸ்தவர்களும் மேலும் மதம் மாறியவர்களும், எவரொருவர் கடவுளின் மீது நம்பிக்கை கொண்டு. இறுதி நாளை நம்பி. மேலும் நல்லவர்களாக வாழ்கிறார்களோ அவர்கள் தங்களின் வெகுமதியை தங்கள் இரட்சகரிடம் இருந்து பெற்றுக்கொள்வார்கள். அவர்கள் அஞ்சுவதற்கு - எதுவுமில்லை . அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள்." 2:62, 5:69

குர்ஆனைக் கொண்டு அணுகினால், கடவுளால் ஒப்புக் கொள்ளப்பட சில வரையரைகளுக்குட்பட்ட எல்லா மதங்களும் - அது கடவுளை எப்பெயரிட்டு அழைப்பினும் - தகுதியானதுதான் என்பது புலனாகும்.

'சரணடைதல்' தவிர வேறெதையும் தனது மார்க்கமாக ஏற்பவர்கள் எவராயினும், அவரிடம் இருந்து அது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இன்னும் மறுமையிலோ. அவர் நஷ்டவாளிகளுடன் இருப்பார். 3:85

கடவுளின் வார்த்தைகள் உண்மையே. உண்மை என்பது நம்முடைய நடவடிக்கைகள் எதுவாயினும் ஒரு போதும் மாறாது. ஆகவே நமது இயற்கையான உந்துதல் கடவுளை மாத்திரம் வழிபடுவதற்காகவே படைக்கப்பட்டிருப்பது தெள்ளத் தெளிவான விஷயம். அதன் செயல்பாட்டு முறைகள் வெவ்வேறான பெயர் கொண்டு அழைக்கப்படுவது ஒரு பொருட்டல்ல.

ஆகையினால், நீங்கள் உங்களை வளைந்து கொடுக்காத ஏகத்துவத்தின் பால் அர்ப்பணிக்க வேண்டும். இதுதான் மனிதர்களின் உள்ளுக்குள் கடவுள்

அமைத்திட்ட இயற்கை உள்ளுணர்வாகும். இதைப் போன்ற, கடவுளின் படைத்தலில் என்றும் மாற்றமில்லை. இதுவே நேரான மார்க்கம் எனினும் அநேக மனிதர்கள் தெரிந்திருக்க மாட்டார்கள். 30:30

தனது ஆன்மாவைக் குறைவு படுத்தும் ஒருவனையன்றி வேறுயார். இப்றாஹீமின் மார்க்கத்தை புறக்கணிப்பவன்? நாம் அவரை இவ்வுலகில் தேர்தெடுத்துள்ளோம். மறுமையிலோ, அவர் நல்லோர்களுடன் இருப்பார். 2:30

முழுநிச்சயமாக. இது உண்மையின் அறிக்கையாகும். முழு நிச்சயமாக, கடவுளைத் தவிர வேறு கடவுள் இங்கு இல்லை . முழு நிச்சயமாக கடவுள் எல்லாம் வல்லவர். ஞானம் மிக்கவர். 3:62

இப்றாஹீம் யூதராகவோ, கிருஸ்தவராகவோ இருந்ததில்லை. அவர் ஓர் அடிபணிந்த ஏகத்துவவாதியாக இருந்தார். அவர் ஒரு போதும் இணைவைப்பவராக இருந்ததில்லை. 3:67

இப்றாஹீம் ஏகத்துவக் கோட்பாட்டைப் பின்பற்றி, கடவுளுக்கு முற்றிலும், அடிபணிந்து நல்லொழுக்க வாழ்க்கை நடத்துபவரை விட தனது மார்க்கத்தில் நன்கு வழிகாட்டல் பெற்றவர் யார்? கடவுள் இப்றாஹீமை அன்பு கூர்ந்த தோழனாக தேர்ந்தெடுத்துள்ளார். 4:125

உங்களின் கூட்டம் - ஒரே கூட்டம் - இத்தகையதே இன்னும் நானே உங்களின் இரட்சகர். நீங்கள் என்னையே அஞ்சி மதித்தல் வேண்டும். ஆயினும் அவர்கள் தங்களுக்குள் குழப்பவிவாதம் செய்யும் பிரிவுகளாக அறுபட்டு விட்டனர். ஒவ்வொரு வகுப்பாரும் தாங்கள் வைத்திருப்பதைக் கொண்டு நிம்மதியடைகின்றனர். 23:52-55

ஆக, கடவுள் நாடுவாரானால், இத்தகைய ஓர் ஆய்வு, இஸ்லாத்தின் பெயரால் கற்பிக்கப்படும் ஒவ்வொன்றினையும் ஆய்வு செய்து, கேள்வி கேட்டு புலன் விசாரணை செய்யும்படி கொண்டு செல்லும். இன்னும் உண்மை இஸ்லாம் எது என அறிந்து கொள்ள ஊக்கு விக்கக்கூடும். ....

# உலகப் பிரபலமான அஹ்மத் தீதாத் எங்கே?

நிச்சயமாக நாம் நம்முடைய தூதர்களுக்கும் அவர்களுடன் நம்பிக்கை கொண்டவர்களுக்கும் உதவிகள் செய்வோம் எனவும், (40:51, 58:21) குர்ஆனின் சத்தியச் செய்தி பரவுவதைத் தடுக்க முயற்சிப்பவர்கள் பழி தீர்க்கப்படுவார்கள் எனவும் கடவுள் குர்ஆனில் வாக்களிக்கிறார். (28:83-84) இவ்விதம் தூதர்களை எதிர்த்தவர்கள் அடைந்த கதிகள் பற்றிக் குர்ஆன் விவரித்துக் கூறுகின்றது. இறுதி நபி முஹம்மதை, அவருடைய சத்தியத் தூதை எதிர்த்தவர்கள் இழிவடைந்து இறந்து போனதைச் சரித்திரச் செய்திகள் விவரிக்கின்றன.

அவ்வாறே மெய்ப்பிக்கும் தூதர் ரஷாத் கலீஃபா அவர்களுடைய செய்தியை ஆரம்பத்தில் ஏற்றுக் கொண்டாலும், பின்னர் அந்த சத்தியக் குறியீடு வெளிப்படுத்திய குர் ஆனின் சிதைவுகளையும் அவருடைய தூதுத்துவத்தையும் நிராகரித்தவர்களில் முதன்மையானவர் உலகப் பிரபலமானவர்களில் ஒருவரான அஹ்மத் தீதாத் என்பவர் ஆவார்.

மேற்படியார் ஒன்றுபட்ட இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் பிறந்து சிறு வயதிலேயே தென் ஆப்பிரிக்காவுக்குக் குடிபெயர்ந்தவர். அங்கே கிறித்துவப் பிரா சரகர்கள் முஸ்லிமான இவரிடம் பிரசாரம் செய்தபோது அவர்களுக்கு பதிலளிப்பதற்காக பைபிளை நன்கு ஆராய்ந்து அதில் உள்ள குற்றங்குறைகளையும் முரண்பாடுகளையும் கண்டுபிடித்துத் தொகுத்து அவர்களுக்கு தக்க பதில் கொடுத்தார். அப்படி அவர் எழுதிய பல புத்தகங்களில் 50,000 Errors in Bible என்பதும் ஒன்றாகும் அப்படி அவர் எழுதிய புத்தகங்களில் உள்ள தகவல்களைக் காப்பியடித்து ஏதோ பைபிளில் உள்ள தவறுகளை இவர்களே ஆய்ந்து கண்டுபிடித்ததைப் போல் சிலர் புத்தகங்களை வெளியிட்டதும் இங்கே நிகழ்ந்த து.

இந்தப் புத்தகங்கள் மூலமும் கிறித்துவப் பாதிரிமார்களிடம் அவர் நடத்திய நேரடி விவாதத்தின் (Cassettes) நாடாக்கள் மூலமும் அவர் உலகம் முழுவதும் உள்ள முஸ்லிம்களிடையே நன்கு பிரபலமானவரானர். உலகம் முழுவதும் உள்ள முஸ்லிம் நாடுகள் அவரை அழைத்து உரைகள் (Lectures) நிகழ்த்தும்படி கேட்டுக்கொண்டனர்

இவ்வாறு 70கள் முதல் 90களின் இறுதி வரை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ண மும் பிரபலமாகி வந்தவர், 70களின் இறுதியில் (குர்ஆன் வெளிப்படுத்தப்பட்டதைப் போலவே) குர் ஆனில் 1400 வருடங்களுக்கும் மேலாக மறைக்கப்பட்டிருந்த இரகசியக் குறியீடு படிப்படியாக வெளிப்படுத்தப்பட்ட போது அவ்வற்புதத்தின் தன்மையை விளங்கிக் கொண்டு அதனை ஏற்றுக் கொண்டார்.

ரஷாத் கலீஃபாவை Greatest Servent of Islam (மிகச் சிறந்த இஸ்லாமிய ஊழியர்) என வர்ணித்தார் 19ன் அற்புதத்தை விவரித்து Al-Quran The Ultimate Miracle என்ற புத்தகத்தை எழுதினார். அப்புத்தகம் உலகெங்கும் உள்ள கற்றறிந்த முஸ்லீம்கள் மத்தியில் ஒரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. மேலும் அது பல்லாயிரக்கணக்கான பிரதிகள் அச்சடிக்கப்பட்டு உலகம் முழுவதும் இலவசமாக வினியோகிக்ககப்பட்டது. இதன் மூலம் 19 என்ற அற்புதத்தைப் புரிந்து கொள்ள உலகத்தாருக்குப் போதிய அவகாசம் கொடுக்கப்பட்டது.

தொடர்ந்து, 19 என்ற அந்த இரகசியக் குறியீடு வெளிப்படுத்திய செய்திகளான குர் ஆன் மட்டுமே மார்க்க ஆதாரம், ஹதீஸ்கள் மார்க்க ஆதாரங்களாகாது என்ற உண்மையையும், குர் ஆனில் கடவுளுக்கிணையாக முஹம்மதை உயர்த்தித் துதித்து அதில் அவர்கள் செய்த சிதைவுகளைப் பற்றிய உண்மைகளையும், ரஷாதின் தூதுத்துவத்தையும் ஏற்றுக் கொள்ளாத அஹ்மத் தீதாத் ரஷாதைப் பொய்யன் என்று தூற்றத் தொடங்கினார். ரஷாதைப் பொய்யன் என்றும் பைத்தியக்காரன் என்றும் அவதூறுப் பிரசாரம் செய்யத் தொடங்கினார்.

ரஷாதின் தூதுத்துவமும் அவர் வெளிப்படுத்திய ஆதாரபூர்வமான செய்திகளும் சவூதியின் சர்வாதிகார ஆட்சியின் அஸ்திவாரத்தை உடைத்தது கண்ட அவ்வாட்சியாளர்கள் ரஷாதின் தூதுத்துவத்தை எதிர்க்க ஏராளமான பொருட்செலவு செய்து சூழ்ச்சித் திட்டங்களைச் செயல் படுத்தினர். இதற்கு அஹ்மத் தீதாத் மிகவும் உதவியாக இருக்கவே அவரை நன்கு பயன்படுத்திக் கொள்ள முடிவு செய்து அவருக்குப் பொற்கிழியும் (பண முடிப்பு) 'ஷெய்க்' (பெரியவர்) என்ற சான்றிதழும் அளித்தது சவூதி அரசு. ஆயினும் இறைவன் அவர்களுடைய சூழ்ச்சியை நிறைவேற அனுமதிக்கவில்லை.

சவூதி அரசிடம் பொற்கிழியும், பாராட்டுப் பத்திரமும் பெறும் வரை சுறுசுறுப்பாக உலகம் முழுதும் சுற்றி செய்திகளில் அடிபட்டுக் கொண்டருந்து அஹ்மத் தீதாத்தைப் பற்றி அதற்குப் பின்னர் எந்தச் செய்தியும் வெளிவரவில்லை அவர் வீழ்ந்து செயலிழந்து விட்டதாக சில விபரமறிந்தவர்கள் கூறினர். ஆயினும் இத்தகவல் உறுதிசெய்யப்படவும் இல்லை. சாதாரண அறிஞர்களைப் பற்றிய செய்திகளைக் கூட பிரமாதப்படுத்தி வெளியிட்டுக் கொண்டிருந்த 'முஸ்லிம்கள்' இதழ்களில் அவரைப்பற்றிய எந்தச் செய்தியையும் பார்க்க முடியவில்லை. 1990களின் இறுதியில் அவர் இறந்து விட்டதாகவும் சிலர் கூறினர். ஆயினும் அச்செய்தியும் உறுதிப்படுத்தப்படாமலே இன்று வரை உள்ளது. கடவுளையும் அவர் தூதரையும் எதிர்த்த அஹ்மத் தீதாத் உயிருடன் உள்ளாரா இல்லையா? அவருக்கு என்ன நேர்ந்தது? கடவுளையும் அவருடைய தூதரையும் கடுமையாக எதிர்த்த அஹ்மத் தீதாத்திற்கு உண்மையில் என்ன ஆனது? செய்திகளை முஸ்லீம் பத்திரிகை உலகம், கண்டு கொள்ளாதது ஏன்? முஸ்லிம் பத்திரிகை உலகத்தினர் அறியத் தருவார்களா? சத்தியம் அவர்களிடம் வந்தபோது அதனை அவர்கள் நிராகரித்ததனால் அவர்கள் அலட்சியமாக இருந்ததன் விளைவை அனுபவித்த னர். (6:5)

-ஆர்

# நாம் படைக்கப்பட்டதின் நோக்கம்!

பகவான் முன்பு படைப்பின் துவக்கத்திலேயே உயிர்களை எல்லாம் ஒன்றாக படைத்து அந்த உயிர்களை பார்த்து சொன்னார் "வேள்வியினால் நீங்கள் பயனடையுங்கள். உங்கள் ஆசைகளை எல்லாம் இந்த வேள்வி உங்களுக்கு விரும்பியதைக் கொடுக்கும் காமதேனுவாக உதவும்"

3:10 (வேள்வி என்பது ஓம குண்டத்தில் நெய்யையும் இதர பொருள்களையும் இட்டு செய்யப்படுவதுதான் என்று நினைப்பது தவறு. இறைவனால் விதிக்கப்பட்ட கடமையை கைமேல் பலனை எதிர்பாராமல் முறையாக செய்வது வேள்வியாகும். மனிதன் இடம் பொருள் ஏவலால் தனக்கு விருப்பம் இல்லாவிடினும் பல காரியங்களை செய்ய நேரிடுகிறது. எனவே நமது நன்மைக்காக இறைவன் அருள் கொண்டு விதித்த கடமையை விருப்பு வெறுப்பற்று செய்வது வேள்வியாகும். மேலும் சத்தியத்தைக் கொண்டு ஒருவருக்கொருவர் உதவி புரிந்து வாழ முற்படுவது வேள்வியாகும். அதுதான் நம்மை ஈடேற்றத்திற்கு கொண்டு செல்லும்.)

## கீதை கூறும் இறைத்தன்மை

1. இவ்வுலகம் எல்லாம் மறைந்துள்ள என்னால் சூழப்பட்டு இருக்கிறது. எங்கும் பரவி நிற்கும் எனக்குள் எல்லாம் படைப்பினங்களும் அடங்கியிருக்கின்றன. நான் அவற்றுக்குள் அடங்கி இருக்கவில்லை. 9:4

2. என்னுள் உயிரினங்கள் உண்மையில் இருப்பதில்லை. அதுதான் என்னுடைய தெய்வீக யோகம். என்னுடைய ஆத்மா பொருள்களை உண்டாக்குகிறது. உண்டாக்கிய பொருள்களை தாங்குகிறது. நான் அவற்றுள் இருப்பதில்லை . 9:5

3. என்னுடைய படைக்கும் தன்மை வாயிலாக சீவராசிகளை மீண்டும் மீண்டும் படைக்கின்றேன். இயக்குவது நான்தான். ஆனால் இந்த காரியங்கள் என்னை கட்டுப்படுத்துவதில்லை . 9-8:9

4. என்னுடைய மேற்பார்வையில் எனது இயற்கை இயக்கமே இந்த சராசரங்களைப் படைக்கின்றது. என்னை மையமாக வைத்தே உலகம் இயங்கி வருகிறது. 9:10

5. உலகத்தின் இலக்கு நான். காப்பாற்றுபவன் நான். தன்துணை சாட்சி நான். இதன் ஆட்சி நான். தஞ்சம் அளிப்பவன். நான் பிறப்பிடம் சேரிடம் பிற்கால இருப்பிடம் நானே. அழியாத விதை நானே. 9:18

6. உள்ளத்தில் வீற்றிருக்கும் என்னை மூடர்கள் அறியமாட்டார்கள். என்னுடைய ஒப்பற்றதன்மையான உயிர்களின் தலைவன் மூலத்துக்கு மூலமான ஆதிமூலம் நான்தான் என்பதையும் அறியமாட்டார்கள். 9:11

7. எவன் என்னை எவ்விடத்தும் பார்க்கிறானோ எல்லாப் பொருள்களையும் என்னிடம் இருப்பதை காண்கிறானோ அவன் என்னை விட்டுப் பிரிவதில்லை. நான் அவனை விட்டு பிரிவதில்லை. 6:30

8. எல்லா உயிர்களுக்கும் நான் காரணமாவேன் (விதை) அறிவாளிகளிடம் அறிவு நான். விளக்கம் தரும் உள்ளொளி நான். 7:10

9. எந்த உயிரினங்கள். பொருள்கள் ஆகியவை சுத்தத்தன்மை (ஸ்த்வ) தொழிற்படுந்தன்மை (ரஜஸ்) அசைவற்ற தன்மை (தமஸ்) ஆகியநிலைகளில் இருக்கின்றனவோ அவைகளை படைத்தவன் நானே. அவைகள் எனக்கு அடங்கியவையே. நான் அவற்றுக்கு அடங்கியவன் அல்லன். 7:12

10. ஸ்த்வ ரஜஸ்தமஸ் என்ற முக்குணங்களால் உண்டாகிய மாறுபட்ட இயல்புகளால் மயங்கிய இவ்வுலகு அதனின்றும் நான் உயர்ந்தவன் என்பதையும் அழிவே இல்லாதவன் என்பதையும் உணர்வதில்லை. 7:13.

11. நான் அழிவற்றவன். இணையில்லாதவன். உத்தமமான பரம நிலையை உடையவன். இதை அறியாத மூடர்கள் ஆதியோ அந்தமோ இல்லாத என்னை மனிதர்களைப் போல பிறப்பவன் என்று நினைக்கிறார்கள்.

12. வானில் வசிக்கும் தேவர்களும். ரிஷிகளும் என்னுடைய ஆதியை அறியமாட்டார்கள். ஏனெனில் நான் தேவர்களுக்கும். ரிஷிகளுக்கும் ஆதாரமானவன். 10:2

13. காரியங்கள் பல உண்டு. அவற்றின் காரணங்கள் நானே. (நான் எல்லாவற்றுக்கும் மூலகாரணம்) என்னிடமிருந்து எல்லாம் இயங்குகின்றன. (இயங்குவது உலகம் இயக்குவது நானே). இதை அறிந்தவன் தன்னை அறிகிறான். தன்னை அறிந்தவன் என்னை மட்டும் ஓர்மையுடன் வழிபடுகின்றான். 10:8

14. நீயே பரப்பிரம்மம். நீயே பரவீடு. தூய்மையானவன் அழிவற்றவன். தேவ புருஷன். தேவர்களுக்கும் தேவன் நீயே. பிறப்பற்றவன். எங்கும் நிறைந்துள்ளவன் என்று 10:8

ரிஷிகளெல்லோரும் கூறுகிறார்கள். தேவரிஷி நாரதரும் கூறுகிறார். அஸிதரும் தேவரும் அப்படியே கூறுகிறார்கள். வியாஸரும் அங்கணமே கூறுகிறார். அதையே திரும்பவும் நீ எனக்கு கூறுகிறாய். 10:12

15. எல்லோருடைய உள்ளத்திலும் தத்துவமாய் நிற்கும் ஆத்மா. நான் உயிர்களின் ஆரம்பம் வளர்ச்சி முடிவு எல்லாமே நான். 10:20.

16. எல்லா உயிர்களுடைய விதைநான். என்னைவிட்டு நிற்கக்கூடிய சராசரப் பொருள்கள் இவ்வுலகத்தில் இல்லை. 10:39


17. என்னுடைய தெய்வீக மகிமைகளுக்கு முடிவில்லை. ஏ! பரந்தாமா. இது சில முக்கியமானவற்றின் சுருக்கம். 10:41

18. ஆனால் இந்த விவரங்களினால் நீ அடையும் பயன் என்ன! ஏ! அர்ச்சுனா! இந்த முழு உலகத்தையும் என்னுடைய ஒரு சிறு அம்சத்தினால் தாங்குகிறேன். 10:42

19. ஓ பரந்தாமா! நீ வர்ணித்தது போல புருஷோத்தமா! தோன்றச் செய்தல். வாழ்வாதாரங்களை வழங்குதல், அழித்தல் தாங்குதல், அற்புதம் படைத்தல் எதிலும் உயர்ந்து எங்஗னும் நிறைதல் ஆகிய தன்மைகள் அனைத்தும் நிறைந்த விஸ்வரூபத்தை என்னால் பார்க்க முடியும் என்றால் எனக்கு காட்டுவாயாக. 11:4.

(தொடர்ச்சி அடுத்த இதழில்......)

**தாஷ்கண்ட் குர்ஆன் பிரதியின் நகல்**



Photocopy from the Tashkent Quran.

(......11ஆம் பக்க தொடர்ச்சி)

இவ்வாறாக, இறைவன் இறக்கிய குர் ஆன் பாதுகாக்கப்பட்டிருப்பது உண்மைதான் சத்தியம் தான் என்றாலும் அன்று முஹம்மத் நபியின் காலத்தில் இறக்கப்பட்டபோது எழுதப்பட்ட அதே விதத்தில் குர் ஆன் இன்றளவும் ஒரு எழுத்துக் கூட மாற்றப்படாமல் அதே விதமாக உலகுக்கு கிடைத்துக் கொண்டிருக்கின்றது என்ற இவர்களின் சாட்சியக் கூற்று பொய்யானது என்பதை நாம் அறிந்து கொள்கிறோம்.

இவ்வாறே முஹம்மத் இறைவனின் தூதர்தான் என்றாலும், இவர்களுடைய இந்த சாட்சியம் பொய்யானது என்று இறைவன் கூறுவதை நாம் விளங்கிக் கொள்ள முடியும். முஹம்மத் இறைவனின் தூதர்தான் என்று அழுத்தந்திருத்தமாக சாட்சியம் அளிக்கும் இவர்கள், உண்மையில் முஹம்மத் கொண்டு வந்த தூதுச்செய்தியான குர் ஆனைப் புறக்கணித்துப் பின்னுக்குத் தள்ளி அவருடைய பெயரால் அவருடைய விரோதிகள் இட்டுக்கட்டிய ஹதீதுகளுக்கு முக்கியத்துவமும் முன்னுரிமையும் கொடுத்து வருகின்றனர் இவர்களுடைய செயல்கள் மூலம் மேற்கண்ட சாட்சியம் அளிக்கும் இவர்கள் பொய்யர்களே என்பதைப் புரிந்து கொள்ள முடியும். இறைவனின் சாட்சியத்தை விளங்கிக் கொள்ள முடியும்.

(..... 17ஆம் பக்க தொடர்ச்சி)

இறக்கிய வேத வசனங்களின் மீதும் உமக்கு முன்னர் அருளப்பட்டவற்றின் மீதும் நம்பிக்கை கொள்வார்கள் மறுமை வாழ்க்கையில் உறுதியுள்ளவர்களாகவும் இருப்பார்கள் அவர்கள் தான் தங்கள் இரட்ஷகரிடமிருந்து நேர்வழியை பெறுகிறவர்கள் அவர்களே வெற்றியாளர்கள் இதன் மூலம் கடவுளின் வழிகாட்டுதலை பெற்றவர்கள் கடவுள் அருளிய வேதங்களில் பேதம் கொள்பவர்களுக்கும் அவர் தேர்ந்தெடுத்த நபிமார்களுக்கு இடையில் ஏற்றத்தாழ்வு கற்பிப்பவர்களுக்கும் நேர்வழி இல்லை என்பது கூறுதியாக உணர்வார்கள் ஏனெனில் இறை நம்பிக்கையாளர்களை கடவுள் இவ்வாறு விசுவாசிக்க கட்டளையிடுகிறார்.

"கூறுங்கள் கடவுளையும் எங்களுக்கு இறக்கி அருளப்பட்டதையும் மேலும் ஆப்ரஹாம் இஸ்மாவேல் இஸ்ஹாக் யாக்கூப் ஆகியோருக்கும் யாக்கூப்பின் சந்ததியினருக்கு அருளப்பட்டதையும் மற்றும் நபிமார்கள் அனைவருக்கும் அவர்களின் இறைவனிடமிருந்து அருளப்பட்டவை அனைத்தையும் நாங்கள் விசுவாசிக்கிறோம். நாங்கள் நபிமார்களுக்கு இடையில் எந்த வேற்றுமையும் பாராட்டமாட்டோம். இன்னும் நாங்கள் அவருக்கே (கடவுளுக்கே) முற்றிலும் கீழ்ப்படிந்தவர்களாக இருக்கிறோம்". 2:136

என்று விசுவாசிக்கச் சொல்லி அவ்வாறு நம்பிக்கை கொண்டவர்களுக்குத் தான் நிச்சயமான நேர்வழி உண்டு என்றும் நன்மாராயம் கூறுகிறார்.

"நீங்கள் நம்பிக்கை கொண்டது போல அவர்களும் நம்பிக்கை கொண்டால் நிச்சயமாக அவர்கள் நேர்வழி பெற்றவர்களாவார்கள்" 2:137

يَسْــَٔلُوْنَكَ عَنِ الْاَهِلَّةِ ۗ قُلْ هِىَ مَوَاقِيْتُ لِلنَّاسِ وَالْحَجِّ
وَلَيْسَ الْبِرُّ بِاَنْ تَاْتُوا الْبُيُوْتَ مِنْ ظُهُوْرِهَا
وَلٰكِنَّ الْبِرَّ مَنِ اتَّقٰى وَاْتُوا الْبُيُوْتَ مِنْ اَبْوَابِهَا
وَاتَّقُوا اللّٰهَ لَعَلَّكُمْ تُفْلِحُوْنَ

*Do Not Beat Around the Bush*

189. They ask you about the phases of the moon! Say, "They provide a timing device for the people, and determine the time of Hajj." It is not righteous to beat around the bush; righteousness is attained by upholding the commandments and by being straightforward. You shall observe God, that you may succeed.

**தலையைச் சுற்றி மூக்கைத் தொடவேண்டாம்.**

189.நிலவின் தோற்றங்களைப் பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர்! கூறுவீராக, "அவை மக்களுக்குக் காலங்கணிக்கின்ற ஓர் உபாயத்தை வழங்குகின்றன, மேலும் ஹஜ்ஜின் காலத்தை நிச்சயிக்கின்றன" சுற்றி வளைத்துப் பேசுவது நன்னெறியாகாது;* நன்னெறியானது கட்டளைகளை ஆதரிப்பது மற்றும் வெளிப் படையாக இருப்பதன் மூலமே அடையப்படுகின்றது. நீங்கள் கடவுள்-ஐக் கருத்தில் கொள்ள வேண்டும், நீங்கள் வெற்றியடையும் பொருட்டு.

وَاقْتُلُوْهُمْ حَيْثُ ثَقِفْتُمُوْهُمْ وَاَخْرِجُوْهُمْ مِّنْ حَيْثُ
اَخْرَجُوْكُمْ وَالْفِتْنَةُ اَشَدُّ مِنَ الْقَتْلِ وَلَا تُقٰتِلُوْهُمْ عِنْدَ
الْمَسْجِدِ الْحَرَامِ حَتّٰى يُقٰتِلُوْكُمْ فِيْهِ فَاِنْ قٰتَلُوْكُمْ
فَاقْتُلُوْهُمْ كَذٰلِكَ جَزَآءُ الْكٰفِرِيْنَ

*Rules of War**

190. You may fight in the cause of God against those who attack you, but do not aggress. God does not love the aggressors.

**போரின் சட்டங்கள்**

190.உங்களைத் தாக்குபவர்களுக்கு எதிராகக் கடவுள்-ன் நிமித்தம் நீங்கள் சண்டையிடலாம், ஆனால் வலுச் சண்டையிடாதீர்கள். வலுச்சண்டையிடு பவர்களைக் கடவுள் நேசிப்பதில்லை.

وَاقْتُلُوْهُمْ حَيْثُ ثَقِفْتُمُوْهُمْ وَاَخْرِجُوْهُمْ مِّنْ حَيْثُ اَخْرَجُوْكُمْ وَالْفِتْنَةُ اَشَدُّ مِنَ الْقَتْلِ وَلَا تُقٰتِلُوْهُمْ عِنْدَ الْمَسْجِدِ الْحَرَامِ حَتّٰى يُقٰتِلُوْكُمْ فِيْهِ فَاِنْ قٰتَلُوْكُمْ فَاقْتُلُوْهُمْ كَذٰلِكَ جَزَآءُ الْكٰفِرِيْنَ

191. You may kill those who wage war against you, and you may evict them whence they evicted you. Oppression is worse than murder. Do not fight them at the Sacred Masjid, unless they attack you therein. If they attack you, you may kill them. This is the just retribution for those disbelievers.

191. உங்களுக்கெதிராகப் போர் தொடுப்பவர்களை நீங்கள் கொல்லலாம், மேலும் அவர்கள் உங்களை வெளியேற்றிய இடத்திலிருந்து அவர்களை நீங்கள் வெளியேற்றலாம். அடக்குமுறை கொலையை விடவும் மோசமானதாகும். புனிதப்பள்ளியில், உங்களை அங்கே அவர்கள் தாக்கினாலேயன்றி, அவர்களுடன் சண்டையிடாதீர்கள். அவர்கள் உங்களைத் தாக்கினால், நீங்கள் அவர்களைக் கொல்லலாம். அந்த நம்ப மறுப்பவர்களுக்குரிய நியாயமாவன தண்டனை இதுவேயாகும்.

فَاِنِ انْتَهَوْا فَاِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌ

192. If they refrain, then God is Forgiver, Most Merciful.

192. அவர்கள் விலகிக் கொண்டால், பின்னர் கடவுள் மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

**அளவற்ற அருளும் நிகரற்ற அன்பும் உடைய இறைவனின் திருப்பெயரால்**

# பிரகடனம்

- அனைத்து மக்களுக்கும் ஒருங்கிணைந்த மார்க்கம்.
- அல்குர் ஆன் சந்தேகமின்றி அகிலங்களின் அதிபதியிடம் இருந்து வந்ததே.
- இறுதி வேதம், அது இறைவனிடம் இருந்து வந்ததுதான் என்பதற்கான தெளிவான அத்தாட்சிகளை தனக்குள்ளேயே கொண்டதாக இருக்கிறது. அது மனித சக்திக்கு அப்பாற்பட்ட முறையில் கணித அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது.
- இது, இறைவன் தான் சத்தியம் என்பதையும், அவர் மரணித்தவரை உயிர்ப்பிப்பார் என்பதையும் அவர் அனைத்திற்கும் ஆற்றல் உடையவர் என்பதையும் நிரூபிக்கிறது.
- எல்லா இறைதூதர்களும் தந்த செய்திகளை ஒருங் கிணைத்து ஒரே செய்தியாக உலகிற்கு தருகிறது.
- முற்றிலும் இறைவனுக்கே அடிபணிதல் இறைவனை மட்டுமே வணங்கி, வணக்கத்தை கலப்பின்றி அவருக்கு மட்டுமே செய்தல்

**ஓர் உலகம்**
**ஓர்-இறை**
**ஒரே செய்தி**

Book - Post

To

*If undelivered Please return to*

SB Graphic Design And Printers
+91 824 854 1120,+91 877 825 7662